மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : அரசு இதழ் பதிவு பெற்றவர்களுக்கும், என்.ஜி.ஓ.-க்களுக்கும் மேற்படி கடன் கொடுக்கப் படுகிறது.

Integrated Water-Supply Scheme

* 265 —.—THIRU V. ISVARMURTI (on behalf of THIRU S. C. SENGOTTUVELAPPA GOUNDER) : Will the Hon. the Chief Minister be pleased to state—

(a) the expenditure incurred for the implementation of the Integrated Water-Supply Scheme from Bhavani River up to Chennimalai in Coimbatore District;

(b) the number of Panchayats benefited by that Scheme; and

(c) whether the financial aid given by the State for the Scheme is in the form of grant or loan?

கூட்டு குடிநீர் திட்டம்

திரு. வ. ஈஸ்வரமூர்த்தி (திரு. எஸ். சி. செங்கோட்டுவேலப்ப கவுண்டர் சார்பில்) : மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) கோவை மாவட்டத்தில் பவானி ஆற்றிலிருந்து சென்னிமலை வரை செயல்படுத்தப்பட்டு வரும் கூட்டு குடிநீர் திட்டத்திற்கு எவ்வளவு தொகை செலவு செய்யப்பட்டுள்ளது ?

(இ) அதனால் நன்மை அடைந்துள்ள பஞ்சாயத்துக்கள் எத்தனை ?

(உ) மேற்படி திட்டச் செலவுகளுக்கு அரசு வழங்கியுள்ள நிதி உதவி மான்யமாகவா அல்லது கடனாகவா ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : (அ) இந்தக் கூட்டுக் குடிநீர் திட்டத்திற்கு 1972-ம் ஆண்டு மே மாதம் வரை மொத்தம் ரூ. 41.69 லட்சம் செலவு ஆகியிருக்கின்றது.

(இ) இத்திட்டத்தின் மூலம் கீழ்க்கண்ட 15 கிராமங்கள் நன்மை அடையும்—

(1) சித்தோடு.

(2) குமிழியம்புரம் (சூரியம்பாளையம்).

(3) கங்காபுரம்.

1972 நவம்பர் 13]

(4) நசியனூர்.
(5) கருமாண்டி செல்லிபாளையம்.
(6) பெருந்துறை.
(7) துடுபட்டி.
(8) சுல்லிபாளையம்.
(9) சீனுபுரம்.
(10) முகசிபிடாரியூர்.
(11) ஒட்டப்பாறை.
(12) அம்மாபாளையம்.
(13) சென்னிமலை.

(உ) இத்திட்டத்திற்கு அரசு வழங்கியுள்ள நிதியும், ஆயுள் காப்பீட்டுக் கழகத்திலிருந்து வாங்கிய உதவியும் ஊராட்சி மன்றங்களுக்கு கடனாக வழங்கப்படும்.

Tamil Nadu Police Benevolent Fund

* 266 Q.—THIRU V. ISVARMURTI : Will the Hon. the Chief Minister be pleased to state the total amount of (1) donations given by the Gazetted Officers; and (2) voluntary subscriptions by the non-Gazetted Officers of the Police Department to the Tamil Nadu Police Benevolent Fund during 1971–72?

தமிழ் நாடு காவலர் நல நிதி

திரு. வ. ஈஸ்வரமூர்த்தி : மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாவிற்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

1971–72-ம் ஆண்டில் தமிழ்நாடு காவலர் நல நிதிக்குக் காவல் துறையைச் சேர்ந்த (1) அரசிதழ் பதிவுள்ள அதிகாரிகள் நன்கொடையாகவும் (2) என்.ஜி.ஓ.வினர் தாமே முன்வந்து உதவித் தொகையாகவும் அளித்த மொத்தத் தொகை எவ்வளவு ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : 1971–72-ம் ஆண்டிற்காக வசூலிக்கப்பட்ட தொகை பின்வருமாறு :—

	ரூபாய்
அரசிதழ் பதிவுள்ள அதிகாரிகள் வழங்கிய நன்கொடை	424.18
என்.ஜி.ஓ.க்கள், தாமே முன்வந்து வழங்கிய சந்தாத் தொகை	57,371.14